# மார்த்தாண்டம் கல்லூரியில் விழிப்புணர்வு கருத்தரங்கு



**மார்த்தாண்டம், செப். 13–**

மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரியின் ஆரோக்கியம் மற்றும் சுகாதாரக் குழுவும், குலசேகரம் ஸ்ரீ ராமகிருஷ்ணா இயற்கை மருத்துவம் மற்றும் யோகா மருத்துவக் கல்லூரியும் இணைந்து வாழ்க்கை முறை கோளாறுகளை குறைக்க இயற்கை வழி என்ற தலைப்பில் விழிப்புணர்வு கருத்தரங்கு நடத்தினர். கல்லூரி முதல்வர் (பொறுப்பு) டாக்டர் பிஜு தலைமை வகித்தார். தாளாளர் டாக்டர் பிரவீன் முன்னிலை வகித்தார். குழு ஒருங்கிணைப்பாளர் டாக்டர் சாந்தி வரவேற்றார். டாக்டர் சுனிதா, நோய் தொற்றுகளை உணவின் மூலம் தடுக்கும் முறைகள், ஆரோக்கிய வாழ்வுக்கு தேவையான உடற்பயிற்சி, உணவு முறைகள், வெந்தய தண்ணீர் அருந்துவதின் அவசியம் குறித்து பேசினார்.

டாக்டர் பிரபா புண்ணியவதி நன்றி கூறினார். ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்கான மருத்துவ முகாமும் நடந்தது.